# அமைச்சரவை விஞ்ஞாபனங்களை / குறிப்புகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் தொடர்பிலான வழிகாட்டுதல்கள்

**2020 ஆகஸ்ட்**

**அமைச்சரவை அலுவலகம்,**
**கொழும்பு 01.**

## அமைச்சரவை விஞ்ஞாபனங்களை / குறிப்புகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் தொடர்பிலான வழிகாட்டுதல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 42(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் குடியரசு அரசாங்கத்தை நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஆட்சித்துறை பொறுப்பாக்கப்பட்ட அமைச்சரவை இருத்தல் வேண்டுமென்பதோடு, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களையும் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களையும் நியமிக்கும், குறித்த அமைச்சர்களின் அமைச்சுகளுக்குரிய விடயங்கள் மற்றும் பணிகளை கையளிக்கும் அதிகாரம் அரசியலமைப்பின் 43 ஆம் 44 ஆம் உறுப்புரையின் கீழான ஏற்பாடுகளின் பிரகாரம் அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

2020-08-09 ஆம் திகதியிடப்பட்டதும் 2187/27 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் அவர்களுடைய அமைச்சுகளுக்குரிய விடயங்கள் மற்றும் பணிகள் கையளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளுக்குரியதாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களினால் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆதலால், அரசியலமைப்பின் கீழ் அல்லது பிற எந்தவொரு எழுத்திலான சட்டத்தின் கீழ் அல்லது நிருவாக ஒழுங்கு விதிகளின் கீழ் பிற அதிகாரபீடங்களுக்கு / நிறுவனங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் நீங்கலாக தமது அமைச்சு உட்பட அதன் கீழுள்ள இராஜாங்க அமைச்சுகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகள் சம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பில் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படுகின்றமை பற்றி உறுதிப்படுத்திக் கொள்வது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்பாகும்.

இதற்கிணங்க, அமைச்சரவைக்கு அமைச்சரவை விஞ்ஞாபனங்களை / குறிப்புகளை சமர்ப்பிக்கும் போது இந்த வழிகாட்டல்களுக்கு அமைவாக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் செயலாற்றுதல் வேண்டும்.

01. **அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்பட வேண்டிய விடயங்கள்:**

(i) ஏற்கனவே வரவுசெலவுத்திட்ட பிரேரிப்பொன்றின் மூலமோ அல்லது அமைச்சரவையின் மூலமோ அங்கீகாரம் கிடைக்கப்பெறாத தேசிய கொள்கை வகுத்தலுக்குரியதான பின்வரும் விடயங்கள் :

(அ) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழுள்ள இராஜாங்க அமைச்சுக்கள் என்பவற்றிற்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளுக்குரியதாக புதிய தேசிய கொள்கைகளை வகுத்தல் அல்லது நடைமுறையிலுள்ள தேசிய கொள்கைகளைத் திருத்துதல்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தேசிய கொள்கையினுள் தயாரிக்கப்பட்ட துறைசார் கொள்கைகள், திறமுறைகள் மற்றும் திட்டங்கள்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட தேசிய கொள்கைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

(ii) புதிய சட்டங்களை வரைதல் அல்லது நடைமுறையிலுள்ள சட்டமொன்றைத் திருத்துதல் தொடர்பிலான பின்வரும் விடயங்கள் :

(அ) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழுள்ள இராஜாங்க அமைச்சுக்கள் என்பவற்றுக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகளுக்குரியதாக புதிய சட்டங்களை / சட்டமூலங்களை அல்லது நடைமுறையிலுள்ள சட்டமொன்றைத் திருத்துவதற்கான சட்டங்களை வரைவதற்கு அத்துடன் அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு சட்டவரைநருக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) சட்டவரைநரினால் வரையப்படும் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் உடன்பாட்டினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் உரிய சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் அதன் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்.

(இ) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலமொன்று சார்பில் குழுநிலை சந்தர்ப்பத்தில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வரைவின் கட்டமைப்பிற்கு மாறான திருத்தங்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் அத்தகைய திருத்தங்கள்.

(ஈ) பல்வேறுபட்ட சட்டங்களின் கீழ் அமைச்சர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் சட்டவரைநரின் உடன்பாட்டுடன் தயாரிக்கப்படும் கட்டளைகள் அல்லது அறிவித்தல்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

(உ) மேல் (ஈ) யில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் அல்லது அறிவித்தல்கள் மூலம் பொது மக்களுக்கு அல்லது குறியிலக்காகக் கொள்ளப்பட்ட தரப்பினர்களுக்கு கணிசமான பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதென அல்லது கருத்து முரண்பாட்டிற்கு இடமுள்ளதென தெரிய வருமாயின் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு முன்னர் அத்தகைய கட்டளைகள்.

(iii) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் / சர்வதேச அமைப்புகளுடன் / வெளிநாட்டு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகள்/ புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடுதல். (இந்த விடயத்திற்குரியதாக சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள 2019-12-19 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உட்பட்டு)

(iv) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையில் திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்டுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் கொள்வனவுக் குழுக்களின் பெறுமதி எல்லைகளை விஞ்சுகின்ற கேள்விகள் சம்பந்தமாக செயலாற்றும் பொருட்டு அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் கொள்வனவுக் குழுக்கள் அனைத்தையும் நியமித்தல் மற்றும் இவ்வாறு நியமிக்கப்படும் கொள்வனவுக் குழுக்களின் சிபாரிசுகளின் பிரகாரம் உரிய கொள்வனவுகளை வழங்குதல்.

(v) தேசிய நலனின் பொருட்டு விதிவிலக்கான நிலைமைகளில் தாபன விதிக் கோவை / நிதி ஒழுங்குவிதிகள் / தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் / அரசாங்க - தனியார் கூட்டுத் தொழில்முயற்சி கருத்திட்டங்களின் கொள்வனவு தொடர்பில் நடைமுறையிலுள்ள வழிகாட்டல் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலகி நடவடிக்கை எடுப்பதற்கு அங்கீகாரத்தை நாடுதல்.

(vi) வருடாந்த வரவுசெலவுத்திட்டத்திலிருந்து குறித்தொதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை மாற்றுவதன் மூலம் செலவினத்தை எதிர்நோக்க முடியாத நிலையில் உள்ள அல்லது அடுத்த வரவுசெலவுத்திட்டம் வரை பிற்போட முடியாத நிலையில் உள்ள அவசர அரச விடயங்களுக்காக பாராளுமன்றத்திற்கு குறைநிரப்பு மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்.

(vii) வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணக் கணக்கு எல்லைகளைத் திருத்துதல்.

(viii) அரசியலமைப்பின் 55(1) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை செய்வதற்குரியதாக அமைச்சரவையின் கொள்கை அங்கீகாரம் வழங்கப்படுவது ஏற்புடையதாகும் சந்தர்ப்பங்களில் குறித்த விடயங்களைத் தீர்மானித்தல் மற்றும் இந்த விடயங்கள் சார்பில் கொள்கை அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல்.

(ix) அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள் அடங்கலாக சகல திணைக்களத் தலைவர்களினதும் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் மற்றும் பதவி நீக்கம் தொடர்பிலான விடயங்கள்.

(x) ஏதேனும் எழுத்து மூலமான சட்டமொன்றின் கீழ் அமைச்சரவை நியமன அதிகாரியாக உள்ள சந்தர்ப்பங்களில் உரிய நியமனங்களை மேற்கொள்தல்.

(xi) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் நியதிச் சட்டசபைகளினதும் ஆண்டறிக்கைகளையும் கணக்கு கூற்றுக்களையும் / வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

(xii) நீதிமன்ற நடவடிக்கையொன்று சம்பந்தமாக அரசு தரப்பொன்றாக உள்ள சந்தர்ப்பத்தில் தீர்வொன்றுக்கு / உடன்பாடொன்றுக்கு வருவது தொடர்பிலான பிரேரிப்புகள்.

(xiii) அரசு தரப்பொன்றாகவுள்ள நீதிமன்ற கட்டளையொன்று சம்பந்தமாக மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கான பிரேரிப்புகள்.

(xiv) இரண்டு அரசாங்க நிறுவனங்களுக்கு இடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்கும் பொருட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் செல்லாது தீர்வொன்று காணுதல் / உடன்பாடு காணுதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் பிரேரிப்புகள்.

(xv) முன்னர் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவது கடினமாக அமையுமாயின் அது பற்றி அமைச்சரவைக்கு அறிவிப்பதற்கான அல்லது அமைச்சரவைத் தீர்மானத்தை திருத்துவதற்கான பிரேரிப்பு.

**02. அங்கீகாரத்தினை எதிர்பார்த்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படலாகாத விடயங்கள்:**

(i) அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அல்லது கட்டளைகள், வெளிப்படுத்தல்கள், ஒழுங்குவிதிகள், நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதி, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள், கொள்வனவு வழிகாட்டல்கள் முதலியன அடங்கலாக வேறு ஏதேனும் இடைநேர் விளைவான சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிற அதிகாரபீடங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்களுக்குரியதான பிரேரிப்புகள். (அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாம் அட்டவணையில் பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களையும் உள்ளடக்கி)

(ii) அமைச்சரவையினால் பிற அதிகாரபீடங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் தொடர்புபட்ட விடயங்கள்.

(iii) நீதிமன்றமொன்றின் முன் முடிவுறாமல் எதிர்பார்த்த நிலையில் உள்ள விடயங்கள் தொடர்பிலான பிரேரிப்புகள் / சிபாரிசுகள் (எனினும், சட்ட விடயமொன்று தொடர்பில் தீர்த்துக் கொள்வதற்கு இயைபுள்ள தரப்புகளுடன் உடன்பாட்டுக்கு வருவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவையானது).

(iv) நீதிமன்றக் கட்டளையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தேவையற்ற போதிலும் அரசாங்கம் தரப்பொன்றாகும் சந்தர்ப்பத்தில் அத்தகைய கட்டளையொன்று தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிப்பது அவசியமானதாகும்.

(v) தேசிய நலனின் பொருட்டு அத்தியாவசியமானவையாக இருந்தாலொழிய, அரசாங்க தொழில் முயற்சிகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் பணிப்பாளர்கள் சபையினால் இயைபுள்ள நிறுவனங்களின் வர்த்தக ரீதியான ஒப்பேறு வாய்ப்பு நிலையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு இசைவற்ற தீரமானங்கள்.

**03. அமைச்சரவை விஞ்ஞாபனங்களை / அமைச்சரவைக் குறிப்புகளைத் தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்படவேண்டிய முக்கிய விடயங்கள்:**

(i) அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் அல்லது அமைச்சரவைக் குறிப்பொன்றின் மூலம் அமைச்சரவைக்கு விடயங்களை முன்வைக்க முடியுமாவது அதிமேதகைய சனாதிபதி அவர்களுக்கு, மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களுக்கு அல்லது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு மாத்திரமேயாகும்.

(ii) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகள் அல்லது குறித்த அமைச்சின் கீழான இராஜாங்க அமைச்சர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்படும் பிரேரிப்புகள் / சிபாரிசுகள் தொடர்பில் அமைச் சரவையின் அங்கீகாரம் நாடப்படுமாயின் **அதன் பொருட்டு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்படுதல் அத்தியாவசியமானதாகும்.**

(iii) ஏற்கனவே அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விஞ்ஞாபனமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக மேலதிக தகவல்கள் / முன்னேற்றம் அல்லது பிற விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவை அறிந்து கொள்ளவேண்டிய தகவல்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சரவைக் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். **இத்தகைய அமைச்சரவைக் குறிப்பொன்றின் மூலம் அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் பிரேரிப்புகள் / சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்படலாகாது.**

(iv) அமைச்சரவை விஞ்ஞாபனத்திலுள்ள பிரேரிப்புகள் / சிபாரிசுகள் தொடர்பிலான பொறுப்பு உரிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு கையளிக்கப்படுவதோடு, தமது அமைச்சரின் ஆலோசனையின்படியும் உரிய சந்தர்ப்பங்களிலும் தமது அமைச்சின் கீழுள்ள இராஜாங்க அமைச்சர்களுடனும் குறித்த இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுடனும் இணைந்து அமைச்சரவை விஞ்ஞாபனங்களை / குறிப்புகளை தயாரிப்பது தொடர்பிலும் அதிலுள்ள விடயங்களின் செம்மைத் தன்மை தொடர்பிலுமான பொறுப்பு உரிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சின் செயலாளருடையதாகும்.

(v) அமைச்சரவை விஞ்ஞாபனத்திலுள்ள பிரேரிப்புகள் / சிபாரிசுகள் வேறு அமைச்சொன்றுக்கு / அமைச்சுகளுக்கு உரியதான விடயங்களுக்கு அல்லது குறித்த அமைச்சுக்கு / அமைச்சுகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு தாக்கத்தினை ஏற்படுத்துமென தெரியவருமாயின் குறித்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் விடயங்கள் மற்றும் பிரேரிப்புகள் சம்பந்தமாக முதலில் உரிய அமைச்சுடன் / அமைச்சுக்களுடன் கலந்துரையாடுதல் வேண்டும்.

(vi) குறித்த கலந்துரையாடலின் போது உடன்பாடு காணப்படும் விடயங்களின் அடிப்படையில் உரிய பிரேரிப்புகளானவை கூட்டு விஞ்ஞாபனமொன்றாக உரிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் ஒப்பத்துடன் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(vii) அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள மாகாண சபைகள், அரசாங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற தாபனங்களின் விடயநோக்கெல்லைக்குரிய விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படலாகாது என்பதோடு, அமைச்சரவையின் அங்கீகாரம் அத்தியாவசியமானதென அத்தகைய தாபனங்கள் கருதுமாயின் மாத்திரம் உரிய விடயங்களைப் பரிசீலனை செய்யும் பொருட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(viii) சட்டங்களை தயாரித்தல் அல்லது நடைமுறையிலுள்ள சட்டங்களைத் திருத்துதல் சம்பந்தமாக அமைச்சரவைக்கு பிரேரிப்புகளைச் சமர்ப்பிக்கும் போது பின்வருமாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்:

(அ) புதிய சட்டமொன்றினை வரைவதற்கு அல்லது நடைமுறையிலுள்ள சட்டமொன்றினைத் திருத்துவதற்கு பிரேரிப்புகளைச் சமர்ப்பிக்கும் போது சட்டத்தினை வரையும் நோக்கத்திற்காக சட்டவரைநர் அடிப்படையாகக் கொள்ளக்கூடிய கருதுகோள் பத்திரமொன்றினை உரிய அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். வரைவு தொடர்பில் சட்டவரைநரின் உடன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் கருதுகோள் பத்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைவதற்கு உரிய ஏற்பாடுகள் சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை பற்றி உறுதிப்படுத்திக் கொள்தல் வேண்டும்.

(ஆ) சட்டவரைநரினால் வரையப்பட்ட சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அங்கீகாரத்தினை நாடும் போது அது மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதோடு, சட்டமூலம் சார்பில் சட்டமா அதிபரின் உடன்பாட்டினையும் அதனுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) சட்டமூலத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரித்து அதன் பின்னர் அங்கீகாரத்தின் பொருட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ix) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டு அரசாங்கங்களுடன் / சர்வதேச அமைப்புகளுடன் / வெளிநாட்டு நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் / புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் பொருட்டு அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும்போது பின்வரும் தகவல்கள் உரிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்:

(அ) உத்தேச உடன்படிக்கைகளை / புரிந்துணர்வு உடன்படிக்கைகளை செய்துகொள்வதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கக்கூடிய நலன்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள்.

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பொறுப்புக்கள் எதுவுமிருப்பின் அது தொடர்பிலான விடயங்கள்.

(இ) இரண்டு நாடுகளுக்கிடையில் உத்தியோகத்தர் மட்டத்தில் உடன்பட்டுள்ள வரைவு உடன்படிக்கையின் பிரதியொன்று விஞ்ஞாபனத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இந்த வரைவுக்கு சட்டமா அதிபரின் உடன்பாடும் வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் உடன்பாடும் பெறப்பட்டுள்ளதா என்பது பற்றியும்.

(x) கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நிதியளிப்புக்கு உரியதாக வெளிநாட்டு நிதியங்களை வழங்கும் நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளை திருத்துவதற்கு / நீடிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் போது முதலில் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினதும் நிதியளிக்கும் உரிய நிறுவனத்தினதும் உடன்பாட்டினைப் பெற்றிருக்க வேண்டுமென்பதோடு, அது பற்றி அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(xi) அமைச்சரவையின் விடயநோக்கெல்லைக்குள் வரும் கொள்வனவுகள் தொடர்பில் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் போது அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் பின்வரும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:

(அ) அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட கொள்வனவு குழுவின் இறுதி சிபாரிசுகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பிரதி.

(ஆ) கொள்வனவுக் குழுவின் தீர்மானம் சகல வெற்றி பெறாத கேள்வியாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதெனவும், கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடுகள் சமர்ப்பிப்பதற்கு விதித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் மேன்முறையீடுகள் கிடைத்துள்ளதெனவும்/ கிடைக்கவில்லையெனவும்.

(இ) கொள்வனவு மேன்முறையீட்டுச் சபைக்கு மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் குறித்த மேன்முறையீடு தொடர்பிலான கொள்வனவு மேன்முறையீட்டுச் சபையின் சிபாரிசுகள் சம்பந்தமாக உடன்படவில்லையாயின் அதுபற்றி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சின் செயலாளரின் கருத்து.

(ஈ) அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசுடமை கம்பனிகளுக்குரிய கொள்வனவு சம்பந்தமாக அமைச்சரவையின் அங்கீகாரம் நாடப்படும் போது உரிய கேள்வி செயற்பாட்டினை ஆரம்பிக்கும் பொருட்டு குறித்த நிறுவனங்களின் பணிப்பாளர் சபையின் / ஆளுநர் சபையின் உடன்பாடு வழங்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதோடு, அதுபற்றி அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடுதலும் வேண்டும்.

(உ) அமைச்சரவையினால் நியமனஞ் செய்யப்பட்ட நிலையியல் கொள்வனவு குழுக்களின் சிபாரிசுகளின் பிரகாரம் அமைச்சரவையின் தழுவு அங்கீகாரத்திற்கு உட்பட்டு, கொள்வனவுகளை வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அங்வாறு வழங்கப்பட்ட கொள்வனவு தொடர்புபட்ட தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை இரு (02) மாதங்களுக்கு ஒரு தடவை அமைச்சரவையின் தழுவு அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

(xii) அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்குரிய ஆண்டறிக்கைகளையும் கணக்கு கூற்றுகளையும் / வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அங்கீகாரம் எதிர்பார்க்கும் போது பின்வரும் தகவல்களுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) நிறுவனத்தின் உரிய காலப்பகுதிக்கான செயலாற்றுகை பற்றிய சுருக்க அறிக்கை.

(ஆ) எதிர்காலத்தில் நிறுவனத்தின் செயலாற்றுகையை விருத்திச் செய்துகொள்வதற்கு பின்பற்றப்படவுள்ள குறுகிய கால மற்றும் நடுத்தவணைகால நடவடிக்கைகள்.

(இ) ஆண்டறிக்கைக்கு உரியதான காலப்பகுதியின் சார்பில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள கணக்காய்வுகளின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை சீர்செய்வதற்கு உரிய நிறுவனத்தின் முகாமைத்து வத்தினால் மற்றும் அதன் பணிப்பாளர் சபையினால் / ஆளுநர் சபையினால் எடுக்கப்பட்டுள்ள அத்துடன் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்.

(ஈ) அமைச்சரவையின் கவனத்திற்கு தொடர்புபடுத்த வேண்டிய நிறுவனத்திற்குரிய பிற முக்கிய விடயங்கள்.

(xiii) சகல அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் / குறிப்புகளும் மும்மொழிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் சில சந்தர்ப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுடன் சமர்ப்பிக்கப்படும் இணைப்புகளை மும்மொழிகளிலும் தயாரித்து தாமதமின்றி சமர்ப்பிக்கும் சிரமத்தினைக் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு, இது தொடர்பில் பின்வருமாறு நடவடிக்கை எடுப்பது பொருத்தமானதாகும்:

(அ) பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்கும் போது இயைபுள்ள இணைப்புகள் மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் -

* பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக சட்டவரைநரினால் தயாரிக்கப்பட்ட சட்டமூலங்கள் அல்லது குறித்த சட்டமொன்றின் துணைச் சட்டமாக பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் கட்டளையொன்று.
* அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் பொது மக்களின் தகவலுக்காக வெளியிடப்படவுள்ள ஆவணமொன்று.
* குறிப்பிட்ட துறையொன்றுக்காகத் தயாரிக்கப்பட்ட கொள்கைக் கூற்றுகள் போன்ற பல்வேறு மட்டங்களிலும் உத்தியோகத்தர் களினால் பயன்படுத்தப்படும் ஆவணங்கள்.
* அமைச்சரவையின் அங்கீகாரத்தை நாடி சமர்ப்பிக்கப்படும் வரைவுச் சுற்றறிக்கைகள்.
* அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ள உடன்படிக்கைகள்.

(ஆ) ஒருசிலரினால் மாத்திரம் உபயோகப்படுத்தக்கூடிய தொழிநுட்ப விடயங்களை உள்ளடக்கிய அறிக்கைகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்படும்போது அதன் பதங்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை / மாற்றம் காணப்படுமிடத்து அதன் மூலம் குழப்பநிலையை உருவாக்கக்கூடிய ஆவணங்கள் மற்றும் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படத்தக்க கொள்வனவுக் குழுக்களின் அறிக்கைகள் போன்ற ஆவணங்களை ஒரு மொழியில் மாத்திரம் தயாரித்து அவற்றிலுள்ள முக்கிய விடயங்கள் தொடர்பில் பொழிப்பு / சுருக்க விபரம் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்வாங்குதல் மிகப் பொருத்தமானதாகும்.

(இ) சட்டவரைநருக்கு வழிகாட்டுதல்களாகத் தயாரித்து அனுப்பப்படும் கருதுகோள் பத்திரம் / ஆவணத்தை மொழியொன்றில் மாத்திரம் சமர்ப்பித்து அவற்றின் உள்ளடக்கத்தில் உள்ள முக்கிய விடயங்கள் குறிப்பிடும் பொழிப்பினை மும்மொழிகளிலும் தயாரிக்கப்படும் விஞ்ஞாபனத்தில் உள்வாங்குதல் அல்லது புறம்பான இணைப்பொன்றாக சமர்ப்பித்தல் பொருத்தமானதாகும்.

(ஈ) அமைச்சரவைக்கு பல்வேறுப்பட்ட குழுக்களின் அறிக்கைகளை சமர்ப்பிக்கும் போது குறித்த குழுவினால் அறிக்கைகள் தயாரிக்கப்பட்ட மொழியிலேயே சமர்ப்பிப்பது போதுமானதாகும் என்பதோடு, உரிய அறிக்கையின் சுருக்கத்தினை அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் சேர்த்தல் வேண்டும்.

(xiv) அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏதேனும் விடயமொன்று சம்பந்தமான அறிக்கையொன்றினை சமர்ப்பிக்கும் போது குறித்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் / குறிப்பில் முன்னைய அமைச்சரவைத் தீர்மானம் பற்றி சுருக்கமாக குறிப்பிடுவதன் மூலம் உரிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை இலகுவாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## 04. அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றில் / அமைச்சரவைக் குறிப்பொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களும் சமர்ப்பிக்கும் முறையும்:

அமைச்சரவைக்கு அறியச் செய்விக்கும் விடயங்களை முன்வைப்பதற்காக மாத்திரம் அமைச்சரவைக் குறிப்பு சமர்ப்பிக்கப்படுவது மிகப் பொருத்தமானதாகும். குறித்த விடயம் முன்னைய அமைச்சரவைத் தீர்மானமொன்று தொடர்புடையதெனின் குறித்த தீர்மானம் பற்றி சுருக்கமாக குறிப்பிட்டு அதற்குரியதாக அமைச்சரவைக்கு அறிவிப்பதற்காக சமர்ப்பிக்கப்படும் மேலதிக தகவல்கள் அமைச்சரவைக் குறிப்பில் சேர்ப்பது போதுமானதாகும்.

ஆயினும், அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் மூலம் திட்டவட்டமான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுவதனால் உரிய சகல விடயங்களையும் இலகுவாக அறிந்துக் கொண்டு மிக உகந்த தீர்மானத்தினை எடுப்பதற்கு அமைச்சரவைக்கு இயலுமாகும் வகையில் அத்தியாவசிய தகவல்கள் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சார்பில் உரிய கட்டமைப்பொன்று இல்லாததோடு, அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் விடயங்களுக்கு அமைவாக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் கட்டமைப்பானது மாறுபடலாம். ஆயினும் ஏதேனும் விடயமொன்று சம்பந்தமாக அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் போது முக்கியமாக அமைச்சரவையின் கவனம் செலுத்தப்படவேண்டிய தகவல்களை பின்வரும் விதத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரிப்புகள் / சிபாரிசுகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பது அமைச்சரவைக்கு இலகுவானதாக அமையும்.

* **தலையங்கம்**

அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் நோக்கம் தெளிவாகும் விதத்தில் தலையங்கமானது எளிதாகவும் மிக சுருக்கமாகவும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

* **பின்னணி**

இதன் கீழ் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்படுவதற்கான நோக்கம் தொடர்பில் சுருக்கமாக குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதோடு, அமைச்சரவையினால் இதற்கு முன்னர் குறித்த விடயம் தொடர்பில் ஏதேனும் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தால் அது தொடர்பிலான தகவல்கள், உரிய திகதி மற்றும் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தின் தொடர்பிலக்கம் என்பன குறிப்பிடப்படுதல் பொருத்தமானதாகும்.

* **விபரம் மற்றும் நியாயப்படுத்துகை**

அமைச்சரவையின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் பிரேரிப்புகள் / சிபாரிசுகள் தொடர்பிலான விபரங்கள் மற்றும் குறித்த பிரேரிப்புகள் / சிபாரிசுகள் தொடர்பிலான நியாயப்படுத்துகைகள் இதன்கீழ் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அதேபோன்று உரிய பிரேரிப்புகள் / சிபாரிசுகள் தொடர்பில் சட்ட ரீதியான விடயங்கள் உரியதாயின் அது தொடர்பிலான தகவல்கள், பிரேரிப்புகளை / சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான செலவு, இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொள்ளப்படும் விதம், உரிய ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் கருத்து தெரிவிப்புகள் உட்பட உடன்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின் அத்தகைய தகவல்களும் இந்த பிரிவில் முன்வைப்பது மிகப் பொருத்தமானதாகும்.

* **பிரேரிப்புகள் / சிபாரிசுகள்**

அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் ஊடாக அங்கீகாரம் எதிர்பார்க்கப்படும் பிரேரிப்புகள் / சிபாரிசுகள் தொடர்பில் பின்னணி மற்றும் நியாயப்படுத்துகை ஆகிய பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குரிய தீர்மானத்தினை வரையும் போது விஞ்ஞாபனத்திலுள்ள பிரேரிப்புகள் / சிபாரிசுகள் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றமை யினால் இந்த பந்தியின் கீழ் குறித்த பிரேரிப்புகள் / சிபாரிசுகள் மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிடுதல் அத்தியாவசியமானதாகும்.

* **ஒப்பமும் திகதியும்**

அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் இறுதியில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரினால் ஒப்பமிட்டு திகதியிடப்பட்டிருத்தல் வேண்டும். தொடர்புடைய விஞ்ஞாபனமானது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இருவர் அல்லது அதற்கு மேல் கூட்டாக சமர்ப்பிக்கும் கூட்டு விஞ்ஞாபனமொன்றாயின் உரிய அமைச்சர்கள் அனைவரும் திகதியிட்டு ஒப்பமிடுதல் வேண்டும். (விஞ்ஞாபனத்தில் பல திகதிகளை குறிப்பிடாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வது ஏற்றதாகும்.) முதலாவதாக சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் தயாரிக்கப்படும் விஞ்ஞாபனம் மாத்திரம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரினால் / அமைச்சர்களினால் ஒப்பமிடுவது போதுமானதாகும். அத்துடன், மொழிபெயர்ப்பு பிரதிகள் "ஒப்பம்./" என குறிப்பிடப்பட்டு உரிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரின் / அமைச்சர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை / குறிப்புகளைச் சமர்ப்பிக்கும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

(i) அமைச்சரவை விஞ்ஞாபனம் / குறிப்பு தயாரிக்கப்படும் மொழி நடையானது எளிதாக அமைதல் வேண்டுமென்பதோடு, இலகுவாக புரிந்துகொள்ள முடியுமாதலும் வேண்டும்.

(ii) அமைச்சரவை விஞ்ஞாபனம் / குறிப்பு இரண்டு பக்கங்களுக்கு வரையறுப்பது பொருத்தமானதாகும்.

(iii) பந்திகள் மற்றும் உபபந்திகள் முறையாகவும் செம்மையாகவும் இலக்கமிடப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, பந்திகளை பிரித்தல் மற்றும் இலக்கமிடுதல் விஞ்ஞாபனத்தின் / குறிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி பிரதிகளில் ஒரே விதத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(iv) முதலில் அமைச்சரவை விஞ்ஞாபனம் / குறிப்பு தயாரிக்கப்படும் மொழியில் சொல்லப்படும் கருத்தானது மொழிபெயர்ப்பிலும் செம்மையாக உள்வாங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) தட்டெழுத்து குறைபாடுகள் மற்றும் மொழிபெயர்ப்பு குறைபாடுகள் என்பவற்றுடனான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / குறிப்புகள் சமர்ப்பிக்கப்படாமல் இருப்பதனை உறுதி செய்யவேண்டுமென்பதோடு, புள்ளி விபர ரீதியிலான தகவல்களின் செம்மை தன்மை தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். மொழிபெயர்ப்பு பிரதிகளிலும் கூட குறித்த புள்ளிவிபர தகவல்கள் பிழையின்றி உள்வாங்கப்பட்டிருப்பதை உறுதி செய்துகொள்தல் வேண்டும்.

(vi) அமைச்சரவை விஞ்ஞாபனத்திலுள்ள / குறிப்பிலுள்ள விடயங்களுக்குரிய அத்தியாவசிய ஆவணங்களை மாத்திரம் இணைப்புகளாக விஞ்ஞாபனத்துடன் / குறிப்புடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த இணைப்புகள் முறையாக இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் / குறிப்பின் உரிய இடங்களிலும் இணைப்பின் குறிப்பிலக்கமானது சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். மொழிபெயர்க்கப்பட்ட பிரதிகளிலும் கூட இதற்கு சமமான விதத்தில் குறித்த இணைப்புகள் முறையாக இலக்கமிடப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்தல் வேண்டும்.

(vii) கனணி ஊடாக விஞ்ஞாபனம் / குறிப்பு தயாரிக்கும் போது தலையங்கம் சார்பில் 14 என்னும் எழுத்து அளவினையும் (Font size) உள்ளடக்கம் சார்பில் 12 என்னும் எழுத்து அளவினையும் (Font size) பயன்படுத்துதல் வேண்டுமென்பதோடு, வரிகளுக்கிடையிலான இடைவெளியானது 1.2 (Line spacing) என்னும் அளவில் இருத்தல் வேண்டும்.

(viii) அச்சிடும் போது A4 (A4 size) அளவிலான கடதாசி மாத்திரம் பயன்படுத்துதல் வேண்டும். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரினால் கைச்சாத்திடப்படும் மூல அமைச்சரவை விஞ்ஞாபனம் / குறிப்பு மற்றும் அதன் மொழிபெயர்ப்பின் மூலப் பிரதி அமைச்சின் உத்தியோகபூர்வ தலைப்பு கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் அச்சிடப்பட்டிருக்க வேண்டுமென்பதோடு, ஏனைய பிரதிகள் A4 கடதாசியின் இரு பக்கங்களிலும் அச்சிடப்படுதல் வேண்டும்.

(ix) அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் / குறிப்பின் பக்கங்கள் அனைத்தினதும் இடது பக்கம் மூன்று சென்றிமீற்றர் பகுதிகொண்ட இடைவெளி பேணப்பட வேண்டுமென்பதோடு, வலது பக்கம் இரண்டு சென்றிமீற்றர் இடைவெளி இருத்தல் வேண்டும்.

(x) பக்கங்களின் இறுதியில் செம்மையாக பக்க இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**05. பொது விடயங்கள்**

(i) அமைச்சரவையினால் மேற்கொள்ளப்படவேண்டிய நியமனங்கள் அடங்கலாக தாபன விடயங்கள் தொடர்புபட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் முதலில் "தாபன விடயங்கள் பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்கு" தொடர்புபடுத்தப்பட்டு இந்த உபகுழுவின் சிபாரிசுகள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்.

(ii) புதிய சட்டத்தினை ஆக்குவதற்கு அல்லது நடைமுறையிலுள்ள சட்டத்தினைத் திருத்துவதற்குரியதாக சமர்ப்பிக்கப்படும் விஞ்ஞாபனங்கள் முதலில் "சட்டவாக்கம் பற்றிய அமைச்சரவை உபகுழுவுக்கு" தொடர்புபடுத்தப்பட்டு இந்த உபகுழுவின் சிபாரிசுகள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்.

(iii) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரினால் கைச்சாத்திடப்படும் மூல அமைச்சரவை விஞ்ஞாபனம் / குறிப்பு மற்றும் அதன் மொழிபெயர்ப்பிற்கான மூல பிரதிகளின் முதற் பக்கமானது அமைச்சின் உத்தியோகப்பூர்வ கடித தலைப்பில் அச்சிடப்படல் வேண்டும்.

(iv) மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட மூல பிரதியுடன் மேலும் 60 பிரதிகள் அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அமைச்சரவை விஞ்ஞாபனமானது அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் ஆண்டறிக்கைகள் சம்பந்தமாகவெனில் விஞ்ஞாபனத்தின் 60 பிரதிகளுடன் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கையின் 05 பிரதிகளும் குறித்த ஆண்டறிக்கை உள்ளடக்கப்பட்ட இறுவெட்டும் (CD) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(v) அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் / குறிப்புடன் சமர்ப்பிக்கப்படும் உள்ளடக்க விளக்கக் கடிதமானது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சின் செயலாளரினால் திகதியிடப்பட்டு அவரே ஒப்பமிட்டிருத்தல் வேண்டும். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சின் செயலாளரினால் இவ்வாறு செய்யமுடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவரினால் அதிகாரம் கையளிக்கப்படும் குறித்த அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரினால் தொடர்புபட்ட உள்ளடக்க விளக்க கடிதத்தில் மேலொப்பம் இடப்படல் வேண்டும். அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் / குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக மேலதிக விடயங்களை தெளிவுபடுத்திக்கொள்ள தேவைப்படுமாயின் அது சம்பந்தமாக தொடர்புகொள்ள வேண்டிய உரிய சிரேட்ட உத்தியோகத்தரின் பெயர், பதவி மற்றும் தொலைபேசி இலக்கம் (செல்லிட தொலைபேசி இலக்கமும் உள்ளடங்கலாக) என்பன குறித்த உள்ளடக்க விளக்க கடிதத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(vi) அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / குறிப்புகள் யாவையும் நிதி என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினதும் ஏனைய உரிய அமைச்சர்களினதும் அவதானிப்புரைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் மாத்திரம் அமைச்சரவை கூட்டத்திற்கான நிகழ்ச்சிக்குறிப்பில் சேர்க்கப்படும். ஆதலால் இதன் பொருட்டு போதுமான கால அவகாசத்துடன் அமைச்சரவை அலுவலகத்திற்கு அமைச்சரவை விஞ்ஞாபனங்களை / குறிப்புகளை அனுப்பிவைப்பது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவரினதும் பொறுப்பாகும்.

(vii) அமைச்சரவையினால் பரிசீலனை செய்யப்படுவதற்காக பிற்போடப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / குறிப்புகள் பற்றி அமைச்சரவை அலுவலகத்தினால் உரிய அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்படுவதோடு, இதற்கிணங்க மீண்டும் அமைச்சரவைக்கு குறித்த விஞ்ஞாபனங்களை / குறிப்புகளை சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படும் பிரதிகளின் எண்ணிக்கையினை துரிதமாக அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவரும் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை செய்திருத்தல் வேண்டும்.

(viii) அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / குறிப்புகள் மற்றும் அவை தொடர்பிலான தீர்மானங்கள் "இரகசியத் தன்மைவாய்ந்த ஆவணங்களாக" கருதப்படுகின்ற மையினால் குறித்த ஆவணங்கள் மற்றும் அவற்றிலுள்ள தகவல்கள் சம்பந்தமற்ற தரப்பினருக்கு கைமாறாமலிருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது அனைத்து அமைச்சுச் செயலாளர்களினதும் பொறுப்பாகும்.

****************